**பிங்கிரிய பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 07 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிங்கிரிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்குச் சொந்தமான ரூபா 8,745,085 தொகையான நிலையான சொத்துக்களின் 42 விடயங்கள் கணக்கீடு செய்யப்படவில்லை. | நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 20 காணிகள் மற்றும் முன்பள்ளிப் பாடசாலை, நூலகம், சிறுவர் பூங்கா, வாராந்த சந்தை மற்றும் கழிவுப் பொருள் நிலையத்திற்கு சொந்தமான சொத்துக்களின் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இடம்பெறுகின்ற காணி மெய்மெய்யாய்வின் போது இந்த ஆதனங்களின் தற்போதைய பெறுமதி சபையின் வருமான பரிசோதகர் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பிரகாரம் உரிய சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மோட்டார் கிரேடர் மற்றும் வீதி செப்பனிடுகை என்பவற்றை வாடகைக்கு வங்கியதால் அறவிவேண்டிய வாடகை ரூபா 214,075 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் சரியாக இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட மோட்டர் கிரேடர் இயந்திரம் மற்றும் பேக்கோ லோடர் என்பவற்றிக்காக வாடகை குறித்த பிரகாரம் செலுத்தப்படாதிருந்ததுடன் அந்த பணம் சபைக்கு அறவிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு சொந்தமான ரூபா 345,198 தொகையான ஆயூர்வேத மருந்து இருப்பின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படுகின்ற சகல இருப்பு மீதிகளும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் இறுதி கணக்குகளுக்குரிய நாட்குறிப்பு பதிவுகள் மூலம் தேவையான சீராக்கங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | காணி மற்றும் மோட்டார் வாகனத்தின் பெறுமதி முறையே ரூபா 792,000 தொகை மற்றும் ரூபா 5,112,000 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது அச்சிடல் வழுவாக இருந்ததுடன் அதனால் பதிவில் குறைபாடுகள் மற்றும் சொத்துக்களின் பெறுமதியில் வேறுபாடுகள் நாட்குறிப்புப் பதிவு மூலம் 2019 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் ஊழியர் கடன் மீதி ரூபா 9,030,884 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 9,301,823 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகளை இனங்கண்டு கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது முன்னைய ஆண்டுகள் முதல் காணப்படுகின்ற வேறுபாடாக கொண்டவரப்பட்டிருந்தமையால் அது தொடர்பாக மேலும் தகவல்களைக் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 02 கணக்கு விடயங்களின் மீதிக்கும் அதற்குரிய பட்டோலைகளின் மீதிக்கும் இடையே ரூபா 57,231,389 தொகையான இணக்கமின்மைகள் காணப்பட்டது. | வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய பட்டோலைகள் பல வருடங்கள் முதல் சரியாக பதியப்படாமையின் காரணமாக கணக்கின் மீதிகளுக்குரிய சரியான பட்டோலையை தயாரித்தலில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. உரிய பட்டோலைகளை பரீட்சித்து உரிய நாளது வரையாக்கல்களை மேற்கொண்டு இந்த வேறுபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 03 கணக்கு விடயங்களுக்கும் உரிய பதிவேடுகளுக்கும் இடையே ரூபா 31,673,360 தொகையான இணக்கமின்மைகள் காணப்பட்டன. | வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய பட்டோலைகள் பல வருடங்கள் முதல் சரியாக பதியப்படாமையின் காரணமாக கணக்கின் மீதிகளுக்குரிய சரியான பட்டோலையை தயாரித்தலில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. உரிய பட்டோலைகளை பரீட்சித்து உரிய நாளது வரையாக்கல்களை மேற்கொண்டு இந்த வேறுபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஐ) | முன்னைய ஆண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,360,283 தொகையான தொங்கல் கணக்கின் வரவு மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,541,473 தொகையான செலவு மீதியாக உட்பட்டிருந்தது. | அது தொடர்பாக ஆராய்ந்து தேவையான சீராக்கங்களைச் செய்து தொங்கல் கணக்கு தீர்க்கப்பட வேண்டும். | தொங்கல் கணக்கு பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுவதுடன் வருடத்திற்கு வருடம் ஏதாவது பெறுமதிகள் சேர்வதன் அடிப்படையில் மீதிகள் மாற்றமடைந்திருந்தன. அதனை சரி செய்வதற்குரிய பழைய தகவல்கள் சரியாக கண்டறிதல் கஷ்டமாக இருந்த போதிலும் |

| | | |
|---|---|---|
| | | அண்மைக் காலமாக ஒன்று சேர்கின்ற பெறுமதிகள் சரியாக தொங்கல் கணக்கில் மீதியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அண்மைக் காலம் வரை கணக்கீடு செய்யப்படாத இரண்டு வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 1,001,767 தொகை கணக்கீடு செய்வதன் அடிப்படையில் தொங்கல் கணக்கின் மீதி ரூபா 2,541,473 வரை அதிகரித்திருந்தது. |
| (ஒ) ரூபா 227,756,730 கூட்டுத் தொகையான 12 கணக்கு விடயங்களுக்கான உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பாக கவலையடைவதுடன் எதிர்வரும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உரிய ஆவணங்கள் மற்றும் தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | சபைக்குச் சொந்தமான சகல காணி மற்றும் கட்டிடங்களும் வருடத்திற்கு ஒரு முறை மெய்மெய்யாய்வு செய்வதற்கு | பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் சபைக்குச் சொந்தமான சகல காணி மற்றும் கட்டிடங்களும் மெய்மெய்யாய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | சபையின் மூலம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக தனியான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணனி துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக தனியான நிலையான சொத்துப் பதிவேடு பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,137,196 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,457,616 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 53,717 தொகையான மதிப்பிழந்த காசோலை தொடர்பாக நிதிப்பிரமாணம் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய நிதிப் பிரமானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறியத்தருகின்றோம். |
| (ஆ) | காசோடு மற்றும் வங்கிக் கூற்றுக்களுக்கிடையே இனங்காணப்படாத ரூபா 181,846 தொகையான வேறுபாட்டினை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | இனம் காணப்படாத வேறுபாடுகளை இனங்கண்டு தீர்த்து வைத்தல் வேண்டும். | இனம் காணப்படாத வேறுபாடுகள் முன்னைய ஆண்டுகள் முதல் கொண்டுவரப்படுவதுடன் அதற்குரிய தகவல்களைக் கண்டறிவதில் வசதியினம் காணப்படுகின்றது. அதனால் இந்த வேறுபாடுகளைத் தீர்த்து வைக்க முடியாதிருந்தது. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 2,879,307 | 3,621,293 | 3,752,289 | 78,938 | 3,319,164 | 4,298,814 | 4,156,815 | 209,953 |
| ii. | வாடகை | 14,702,060 | 13,618,791 | 13,819,122 | 768,007 | 13,928,798 | 14,662,448 | 14,576,193 | 968,338 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 910,000 | 814,005 | 815,005 | - | 380,000 | 790,538 | 789,538 | 1,000 |
| iv. | ஏனைய வருமானம் | 70,616,700 | 89,695,292 | 76,819,273 | 44,712,708 | 74,163,500 | 72,047,353 | 72,047,358 | 31,836,689 |
| | மொத்தம் | 89,108,067 | 107,749,381 | 95,205,689 | 45,559,653 | 91,791,462 | 91,799,153 | 91,569,904 | 33,015,980 |

குறிப்பு

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானப் பெறுமதியில் கடந்த ஆண்டுகளுக்குரிய நிலுவை கிடைப்பனவுகளும் உள்ளடங்கியுள்ளது.

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆண்டின் இறுதியில் சபை அதிகாரப் பிரதேசத்தில் 90 ஆதனங்களில் இருந்து ரூபா 24,600 தொகையான ஏக்கர் வரித் தொகை அறிவிட வேண்டி காணப்பட்டது. | நிலுவையை அறவிடுவதற்கும் தேவையான சீராக்கங்களை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 43 காணி உரிமையாளர்களுக்காக ரூபா 11,780 தொகை மேலதிகமாக கணிப்பீடு செய்யப்பட்டு நிலுவை வரித் தொகையாக பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இவ்வாறு மேலதிகமாக கணிப்பீடு செய்யப்பட்ட நிலுவைப் பணத்தை பதிவழிப்பதற்கு பொதுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 வியாபார அலகுகளில் இருந்து ரூபா 30,600 தொகையான வியாபார வரி அறவிட வேண்டியிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வியாபார வரியை அறவிடுவதற்காக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. |

## 2.3.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் போது பிங்கிரிய வியாபாரக் கடைத் தொகுதியில் 18 கடைகள் மற்றும் ஹல்மில்லவெவ, ஹபவெவ போன்றவற்றில் 02 கடைகள் என்பன கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் போது அந்த மதிப்பீடு அமுல்படுத்தப்படாமையால் ரூபா 320,160 தொகையான வருமானத்தை சபை இழந்திருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் குறித்த அண்மித்த ஆண்டு முதல் வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடைகளுக்கான புதிய மதிப்பீடு 2017.08.02 மற்றும் 2017.10.12 ஆம் திகதிகளில் மதிப்பீட்டு திணைக்களத்தினால் பெறப்பட்டிருந்தது. முன்னால் செயலாளர் அவர்களுக்கு கடை வாடகை அதிகரிப்பது தொடர்பாக வியாபார சமூகத்தின் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமையின் காரணமாக அது அமுல்படுத்தப்படவில்லை. செயலாளரால் அந்த மதிப்பீடு 2018.10.09 ஆம் திகதி பொதுச் சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் பொதுச் சபை மதிப்பீட்டை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் 2019 சனவரி 01 ஆம் திகதி முதல் இந்த மதிப்பீடு அமுல்படுத்தப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதற்குரிய முன்னைய ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற 05 சந்தர்ப்பங்களின் போது அறவிட வேண்டிய ரூபா 764,557 தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன் படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 04 வாடகை ஆதனங்களுக்கு உரியதாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஏனைய ஆதனங்களுக்கு உரிய நபர்கள் மரணமடைந்துள்ளமையினால் நிலுவைப் பணத்தை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரிடம் விசாரித்து பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 61 வியாபார அலகுகளில் இருந்து ரூபா 61,000 தொகையான வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் அதில் 32 வியாபார அலகுகளில் இருந்து அனுமதிப் பத்திரக் கட்டணத்ததை அறவிடுவதற்காக சபையினால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. | பிரதேச சபைகள் அதிகார சட்டத்தினதும் விதிகளினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018.12.31 ஆம் திகதிக்கு முன்னர் M.O.H சிபாரிசு கிடைத்திருந்தும் அவ்வாறு அனுமதிப்பத்திரம் பெறாதிருந்த வியாபாரிகளின் இடங்களில் இருந்து அந்தக் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறு அனுமதிப் பத்திரம் பெறாதிருந்த வியாபாரிகளுக்காக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இது வரையில் 24 வழக்குகளுக்காக தீர்ப்பு கிடைத்திருந்ததுடன் அதற்குரிய தண்டப்பணமும் அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | சிபாரிசினைப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார வைத்திய உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்ட 136 வியாபார அலகுகளுக்குரிய விண்ணப்பங்கள் அங்கீகரித்து அனுப்பப்படாதிருந்ததுடன் அதற்குரிய அனுமதிப் பத்திரக் கட்டணம் 2018 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | குறித்த கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய விண்ணப்பங்கள் சரியான திகதிக்கு அனுப்பப்பட்டிருந்தும் பொது சுகாதார பரிசோதகரால் அந்த வியாபார இடங்கள் பரீட்சிக்கப்பட்டு சிபாரிசு இது வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த தாமதத்தை குறைப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 8,913,628 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 31,711,876 ஆக இருந்தன. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 வது பிரிவின் கீழ் 29 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்தமையால் அந்த விடயங்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட உப விதிகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தேவையின் பிரகாரம் எந்தவொரு உப விதியும் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தேவையான பிரகாரம் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

(ஆ) எதிர்பார்த்த நலன்கள் பெறப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | தற்போது செயற்படு நிலையில் காணப்படுகின்ற மில்லந்த நீர் செயற்திட்டத்தின் இயலளவை அதிகரிப்பதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சபை நிதியம் மற்றும் மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி நிதியம் என்பவற்றிலிருந்து ரூபா 2,834,444 தொகை செலவில் மேலதிக நீர் வழங்கலை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2019 சனவரி 28 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிர்மாணங்கள் குறித்த காலத்தில் நிறைவேற்றப்பட்டு பொது மக்களுக்கு சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் இறுதியில் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டம் ஆனமையால் பம்பிக் கூடத்திற்கு மின்சாரத்தை வழங்குவதற்காக ஒப்பந்தகாரரினால் இலங்கை மின்சார சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் குழாய் பதித்தல் நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மின்சார வழங்கலும் வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (ii) | ரூபா 9,400,000 செலவில் 07 கடைகளை உடையதாக நிர்மாணிக்கப்பட்ட போவத்த பேரூந்து நிலையம் 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும் உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படவில்லை | சபைக்குச் சொந்தமான ஆதனங்களில் இருந்து மக்களுக்கு சேவையினை வழங்குவதற்கும் சபைக்கு வருமானத்தை உழைத்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த ஆண்டின் போது தேவையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு பேரூந்து நிலையத்தை செயற்படு நிலைக்கு கொண்டு வந்து மக்களுக்கு உரித்தை கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மாகாண குறித்த வீதிகள், போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் வியாபார வீடமைப்புத் தொகுதிகளை நிர்மாணிக்கும் வேலைகள் | உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்காக மக்களின் |

| | | |
|---|---|---|
| மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கஹவல வத்த குடிநீர் செயற்திட்டத்திற்காக ரூபா 7,189,225 தொகை செலவிடப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும் மக்களுக்கு நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | கோரிக்கையின் அடிப்படையில் நீரை வழங்கும் முறைமையொன்று விரிவுபடுத்தப்பட்டதுடன் அதற்காக புதிதாக குழாய் கிணறு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. முடியுமான அளவு நீரின் அளவை வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

(இ) இலக்குகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் பாதீட்டின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட ரூபா 3,368,590 தொகையான 20 வேலைகள் நிறைவேற்றப்படவில்லை. | பாதீடு செய்யப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து மக்கள் பிரதிநிதிகளின் வருகையுடன் அவர்களின் முன்மொழிவுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டி ஏற்பட்டமையினால் 2018 இன் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பல வருட காலமாக கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,695,256 தொகையான மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அந்த மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முற்பணமாக ரூபா 1,408,026 தொகை கணக்கில் பதியப்பட்டிருந்ததுடன் அத் தொகை 2018 ஆம் ஆண்டில் முற்பணப் பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை. இது முன்னைய ஆண்டு முதல் |

| | | | |
|---|---|---|---|
| | | | கொண்டுவரப்படுகின்ற மீதியாக இருந்தமையால் எதிர்காலத்தில் ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். பெறுமதி சேர் வரியான ரூபா 242,889 தொகை மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியான ரூபா 44,341 தொகை என்பவற்றை இயலுமானவரை விரைவாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | செயற்படு நிலையில் காணப்படாத சமூக சபைகளுக்காக பகிர்ந்தளிப்பதற்கு ரூபா 661,550 தொகையான 700 கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையிலும் அந்த கதிரைகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. | தேவைகளை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். | தற்போது சமூக சபைகள் செயற்படு நிலையில் காணப்படுவதுடன் இயலுமான வரையில் விரைவாக இந்தக் கதிரைகளை சமூக சபைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) | விளையாட்டுச் சங்கங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு ரூபா 199,580 தொகையான விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஏப்ரல் 08 அந் திகதி வரையிலும் விளையாட்டு உபகரணங்களை பகிந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேவைகளை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். | கொள்வனவு செய்யும் நடைமுறையில் வழுக்கள் ஏற்பட்டிருந்ததுடன் அதனை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் நடாத்தப்படுகின்ற பிரதான விழாக்களின் போது இந்த பொருட்களை பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் சபையில் வெற்றிடங்கள் 34 பதவிகளும், மிகையில் 19 பதவிகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கும் மிகையினை முறைமைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| சுகயீனத்தின் காரணமாக சேவைக்கு அறிக்கையிடப்படாத உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 162,230 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 160,980 மற்றும் 1,250 என்ற மீதிகள் ஆதனக் கடன் மற்றும் விழா முற்பணமாக இருந்ததுடன் அவர்கள் இதுவரையிலும் சேவைக்கு அறிக்கையிடாமையின் அடிப்படையில் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |
| **(இ) ஊழியர் பிணை** | | |
| 2018 ஆம் ஆண்டின் போது 42 உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 64,975 பிணைப் பணமொன்று அறவிடப்பட்டிருந்த போதும் அவற்றை உத்தியோகத்தர்களின் பெயரில் வைப்புக் கணக்குகளில் முதலீடு செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உத்தியோகத்தார்களின் பெயரில் கணக்குகளை ஆரம்பித்து அந்த பிணைப் பணத்தை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர் பிணைக்காக ஊழியர்களின் சிலருக்கு மாத்திரமே கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த கணக்குகளை ஆரம்பித்து பிணைப் பணத்தை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள 51 கைத்தொழில்கள் வியாபார அனுமதிப் பத்திரத்தை பெறாதிருந்ததுடன் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெறாதிருந்த 140 கைத்தொழில்களுக்காக வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு பிரிவிற்கும் இடையே சரியான தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் பணிகளை சரியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் பிரிவு மற்றும் வருமானப் பிரிவு என்பவற்றுக்கிடையே தொடர்பாடலில் ஏற்பட்டுள்ள இந்த பிரச்சினை 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான சிசில செவன (மட்டவன கந்த) கூறு இலக்கம் 17 என்ற 01 ரூட் 21.7 பேச் அளவான காணி அனுமதியற்றவரினால் உரிமை கோரப்பட்டிருந்ததுடன் கூறு இலக்கம் 44 என்ற 01 ரூட் 4.1 பேச் அளவான காணி இனங்காண முடியாத வகையில் காணப்பட்டது. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்கூறப்பட்ட சபைக்குரிய காணியில் அனுமதியற்று நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் பாவனையிலிருந்து அகற்றுமாறு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எல்லை வேலியினை அமைப்பதற்கு நடவடிக்கை எ:டுக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றோம். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமாகக் காணப்படுகின்ற ரூபா 856,136 தொகையான 04 வாகனங்கள் எந்தவித பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாமல் பயனற்றுக் | விளைவற்ற சொத்துக்களை பழுதுபார்ப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை | இலக்கம் 01 மற்றும் 02 என்ற சொத்துக்களுக்காக இயந்திர பொறியியலாளர் அறிக்கை பெறப்பட்டு பழுது பார்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது | எடுக்கப்படல் வேண்டும். | சிறுகொங்ரீட்கல் மெஷின்கள் இரண்டிற்காகவும் ஆகக் குறைந்த மதிப்பீட்டு விலை இயந்திர பொறியியளாளரிடமிருந்து பெறப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் சபை நிதியத்தின் ரூபா 3,100,000 தொகை செலவில் கிறீன் எஸ்டேட் காணியில் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக மண்டபம் மற்றும் மலசலகூட முறைமைகள் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டடிற்கு எடுக்கப்படவில்லை. | சபை நிதியை ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | சனநடமாட்டமற்ற பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டமையால் நீரை வழங்குவதற்கு பிரச்சினை ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இந்த இடத்தை விழா மண்டபமாக அபிவிருத்தி செய்து இந்த மலசலகூடத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேற்கூறப்பட்ட நிர்மாணங்கள் கட்டம் கட்டமாக அமுல்படுத்தப்பட்டு மிகவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2015 ஆம் ஆண்டில் ரூபா 7,000,000 செலவில் போவத்த நகரில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடியின் மலசலகூட முறைமை மக்களின் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் பூட்டு இட்டு மூடப்பட்டிருந்தது. | மக்களின் பணத்தை செலவிட்டு நிர்மாணிக்கப்படுகின்ற சொத்துக்களை பயனுள்ள வகையில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்காக நீர் வழங்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இதில் ஏற்பட்டுள்ள ஏனைய குறைபாடுகளும் சரிசெய்யப்பட்டு மக்கள் உரித்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். உரிய ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.2 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான 252-6372 என்ற கெப் வண்டிக்காக புதிய சட்டகமொன்றை வைப்பதற்கு ரூபா 1,475,000 மதிப்பீடு செய்யப்படட தொகையில் உள்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் தெரிவு செய்யப்பட்டிருந்த நிறுவனத்தினால் சபையின் அங்கீகாரத்திற்காக வழங்குவதற்கு முன் இயந்திர பொருளியலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ரூபா 206,209 தொகையான மேலதிக பழுதுபார்த்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யுமாறு சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆரம்ப மதிப்பீட்டில் குறிப்பிடப்பட் மேலதிகமான மதிப்பீடு ஒன்றையும் உள்ளடக்கியிருந்ததுடன் அதற்காக ரூபா 46,300 தொகை செலவிடப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக இயனந்திர பொரியியளாளர் அவருக்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அவ்வாறு ஒரே செலவினம் இரு தடவைகள் காண்பிக்கப்பட்டிருக்குமாயின் அவ்வாறு செலுத்தப்பட்ட அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அரச நிதி மற்றும் கணக்குகள் பணிப்பாளர் பெயரிலான ரூபா 200,000 தொகை, பெருந்தெருக்கள் அமைச்சின் பேரில் ரூபா 3,095 தொகை மற்றும் கடன்பட்டோர் ரூபா 20,494,008 தொகை என்பவற்றை இனங்காணாமல் நாட்குறிப்பு இலக்கம் 27, 28 மற்றும் 39 மூலம் திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | மீதிகளைப் பதிவழிக்கும் போது தனிப்பட்ட மீதிகளை இனங்கண்டு நாட்குறிப்புக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கடன்பட்டோர் மீதிக்குரிய எந்தவொரு தகவல்களோ அல்லது பட்டோலையோ கண்டறிய முடியாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) நீர் செயற்திட்ட கடன் கொடுத்தோர் மீதி ரூபா 310,132 தொகையும், நானாவித கடன் கொடுத்தோர் ரூபா 12,354,100 தொகையும் முறையான அங்கீகாரம் இன்றி நாட்குறிப்பு இலக்கம் 29 மற்றும் 35 இன் மூலம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | மீதிகளைப் பதிவழிக்கும் போது தனிப்பட்ட மீதிகளை இனங்கண்டு நாட்குறிப்புக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கடன்பட்டோர் மீதிக்குரிய எந்தவொரு தகவல்களோ அல்லது பட்டோலையோ கண்டறிய முடியாதிருந்தது. |

### 3.7 பெறுகை

### 3.7.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். |

### 3.7.2 வழங்கல் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதி விளக்குகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது சில விடயங்களுக்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்படாமல் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் நிராகரிக்கப்பட்டு கூடிய விலையில் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக சபை நிதியத்திற்கு ரூபா 201,475 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | சபை நிதியத்திற்கு சாதகமான வகையில் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுகைக் குழு எடுத்த ஒட்டுமொத்த தீர்மானம் ஆனமையால் அது தொடர்பாக எதிர்காலத்தில் கௌரவ உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டு அது தொடர்பாக சரியான தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.7.3 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2015 திசெம்பர் 22 ஆம் திகதிய நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் 2016/01 ஆம் இலக்கத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் வீதிகளுக்கு கிரவல் இடுதல் தற்காலிக நிறுத்தப்பட்டதாக காண்பிக்கப்பட்ட போதிலும், 2018 ஆம் ஆண்டில் 35 வீதிகளுக்கு கிரவல் இடுவதற்காக ரூபா 2,378,257278 தொகையும், 2018 ஆம் ஆண்டில் 11 வீதிகளுக்கு கிரவல் இடுவதற்காக ரூபா 2,378,257 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த கிரவல் இடப்பட்ட வீதிகள் சரியான தடிப்பத்தில் போடப்படாமை, கிரவல் கழுவிச் செல்லப்பட்டிருந்தமை மற்றும் குழிகள் ஏற்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனை களுக்கு இணங்க வேண்டியிருந்த துடன் உரிய வேலைகள் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப் படுவது மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் பந்தியின் பிரகாரம் கௌரவ சபைக்கு அறிவித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியம் ரூபா 996,275 தொகை செலவில் மூக்கலன்ஹேன கிராம சேவையாளர் பிரிவில் டில்ஷான் விற்பனைக் கடை பானவெவ வரை திவெனநாமல் உயன வீதிக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்வதாக காண்பிக்கப்பட்ட போதிலும் வீதியின் ஒரு பகுதி ரூபா 114,649 தொகை செலவில் கெங்கிரீட் இடப்பட்டிருந்ததுடன் பௌதீக பரிசோதனை சந்தர்ப்பத்தின் போது மேற்பகுதியில் கல் வெளிப்பட்டு கலன்று காணப்பட்டது. | உரிய நிர்மாணங்களை சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் சபையினால் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | மேற்கூறப்பட்ட குறைபாடுகளை ஒப்பந்த சங்கத்திற்கு அறிவித்திருந்ததுடன் கொங்கிரீட் தட்டு வெளிக்கிளம்பி தார் இடப்பட்ட சிப்ஸ் கல் உடைந்து இருந்தமையை சரியாக அமைப்பதற்கு ஒப்பந்தகாரருக்கு அறிவித்திருந்ததுடன் அதனை சரி செய்து நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |